www.padippakam.com

# இஸ்லாமியத் தமிழரும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இஸ்லாமியத் தமிழரும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்

அரசியற் குழு
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

படிப்பகம்

www.padippakam.com

முதற்பதிப்பு : ஜனவரி 87



தமிழீழ விடுதலைப் போரில் முதற் களபலியான இஸ்லாமியத் தமிழ் வீர மறவன் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லெப்டினன்ட் ஜுனைதீனுக்கு இந்நூல் காணிக்கை.

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

இலங்கையில் 'முஸ்லீம்' என அழைக்கப்படும் மக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவிய தமிழர்கள். இந்த இஸ்லாமியத் தமிழர்கள் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு இணைபிரியாத அங்கம் என்பது எமது நிலைப்பாடு. இலங்கையின் வடக்கையும், கிழக்கையும் கொண்ட தமிழ்த் தாயகப் பூமியில், கணிசமான தொகையில் இஸ்லாமியத் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களது சமூகப் பொருளாதார வாழ்க்கை தமிழரோடு பின்னிப் பிணைந்ததாக அமையப்பெற்றிருக்கிறது. பூகோள ரீதியாகவும் பிரிக்க முடியாதவாறு தமிழ்த் தாயகம் எம்மை அரவணைத்து, ஒன்றிணைத்து வைத்திருக்கிறது. எமது பொதுக் கலாச்சார ஆன்மாவாக, தமிழ் மொழி எமது தேசிய ஒருமைப்பாட்டிற்கு அத்திவாரமாக உள்ளது.

சிங்கள அரசானது தமிழ்த் தேசியத்தைச் சீர்குலைத்து, தமிழ்த் தாயகத்தைச் சிதறடித்து, தமிழினத்தை ஒழித்துக் கட்டும் நோக்குடன் மேற்கொண்ட இனவாத ஒடுக்குமுறையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் கிழக்கிலங்கை வாழ் இஸ்லாமியத் தமிழ் மக்களே. காணி நிலத்தை இழந்து, கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்பை இழந்து, பாதுகாப்பை இழந்து, சதா பயந்து வாழும் பரிதாப சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் எமது இஸ்லாமியச் சகோதரர்கள் இன்று தமது எதிர்காலம் பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். தமது எதிர்காலம், தமது அரசியல் தலைவிதி, என்பன ஏனைய தமிழ் மக்களோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதை உணரத் தொடங்கியுள்ளனர்.

தமிழரோடு இணைந்த, தமிழ்த் தேசியத்தோடு சங்கமித்த, ஒரு தீர்வுதான் இஸ்லாமியத் தமிழ் மக்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் கொடுக்கும். இத் தீர்வு மூலம்தான் இஸ்லாமியத் தமிழர்கள் தமது மதத்தைப் பேணி வளர்க்க முடியும்; தமது கலாச்சாரத் தனித்தன்மைகளை

படிப்பகம்

www.padippakam.com

வலுப்படுத்த முடியும்; தமது சமூக, பொருளாதார வாழ்க்கையை மேம்பாடு செய்யமுடியும்; தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். இந்தத் தீர்வு தமிழீழத் தனியரசை அமைப்பதுதான்.

தமிழீழத் தாயகத்தை மீட்டு, தனியரசை நிறுவ எமது விடுதலை இயக்கம் முன்னெடுத்து வரும் விடுதலைப் போராட்டத்தின் புரட்சிகரத் தீ, இன்று கிழக்கிலங்கை எங்கும் பரவிவருகிறது. இந்தப் புரட்சிப் போராட்டத்தில் இஸ்லாமியத் தமிழ் இளைஞர்களும் ஆயுதமேந்தி, வீரப் புலிகளாகக் களத்தில் குதித்துள்ளனர். மதம், சாதி என்ற எல்லைக் கோடுகளை அழித்து, ஓரினம் என்ற தேசிய எழுச்சியும், ஒரே நிலம் என்ற தாயகப் பற்றுணர்வும் இஸ்லாமியத் தமிழர்களை எமது புரட்சிப் போராட்டத்தில் அணி திரட்டி வருகிறது. இரத்தம் சிந்தும் எமது விடுதலைப் போராட்டம் இஸ்லாமியத் தமிழரின் விடிவுக்கு வழிகோலும் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு.

இந்த அரசியல் ஆவணம் இஸ்லாமியத் தமிழர்களின் இன்றைய பிரச்சினைகளை ஆய்வு செய்கிறது; சிங்கள இனவாத அரசின் சூழ்ச்சிகளையும், அதனால் இஸ்லாமியத் தமிழர்களுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளையும் விளக்குகிறது; தமிழீழத் தனியரசே இஸ்லாமிய மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை வழங்கும் என வலியுறுத்துகிறது.

அரசியல் பிரிவு

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

படிப்பகம்

www.padippakam.com

5

# இஸ்லாமியத் தமிழரும், தமிழீழ விடுதலைப் போராட்டமும்

சிங்கள ஆட்சியாளர்களால் தாக்குப்பிடிக்க முடியாத அளவுக்குத் தமிழீழப் போராட்டம் வீறுபெற்றுள்ள இன்றைய நிலையில், ''தமிழீழ விடுதலை இஸ்லாமியர்களுக்கு நன்மை பயக்குமா?'' ''பெரும்பான்மையான இஸ்லாமியத் தமிழ்மக்கள் தமிழீழத்துக்கு வெளியே வசிக்கும் சூழ்நிலையில் தமிழீழத்தால் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுமா?'' ''இஸ்லாமியத் தமிழர்கள் தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களா?'' என்பவை போன்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. சிங்களப் பேரினவாதிகளும், அவர்களின் அடிவருடிகளாகச் செயற்பட்டுவரும் மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த கொழும்புவாழ் இஸ்லாமியத் தமிழர் ''தலைவர்''களுமே இவ்வாறான கேள்விகளை எழுப்பிவருகின்றனர்.

இஸ்லாமியத் தமிழர்களும் தமிழ்த் தேசிய இனத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமே. ஏனைய தமிழர்கள் இந்து மார்க்கம், கிருத்துவ மார்க்கம் என்று ஏற்றுக் கொண்டதைப் போலவே இஸ்லாமியத் தமிழர்களும் இஸ்லாம் மதத்தைத் தமது மார்க்கமாகக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்கள் இனத்தால் தமிழர்களே. தமிழ் மொழிமீது அவர்கள் ஏனைய தமிழர்களைவிட அதிகப் பற்றுக்கொண்டவர்கள் என்றுகூடச்சொல்லலாம். அவர்கள் தாய் மொழியாம் தமிழ் மொழியை எங்கும் எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் பயன்படுத்துவதற்குத் தயங்குவதில்லை; தமிழீழத்துக்கு வெளியே மிகச் சிறுபான்மையினராக இருந்துவரும் பகுதிகளில்கூட அவர்கள் பேச்சு மொழியாக, போதனா மொழியாகக் கொண்டிருப்பது தமிழ் மொழியையே. கடந்தகால வரலாற்றில் தமிழ் மொழிக்கான போராட்டங்களாகட்டும், இன உரிமைகளுக்கான போராட்டங்களாகட்டும் தமிழ்ப் பகுதிகளில் வாழ்ந்துவரும் இஸ்லாமியத் தமிழர்கள் ஏனைய தமிழர்களோடு அணி அணியாகக் கலந்து கொண்டு பங்கேற்றார்கள்; சிறை சென்றார்கள்.

இலங்கை இஸ்லாமியர்கள் ஸேபிய, பினீசிய அரபு மூலத்திலிருந்து வந்தவர்களென்று சிலர் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், இலங்கை முழுவதும் பரந்துபட்டு வாழும் இஸ்லாமியர்களின் மொழி, கலாச்சாரம் என்பன

படிப்பகம்

www.padippakam.com



ஏனைய தமிழர்களை ஒட்டியதாகவே இருந்துவருகிறது. இலங்கைவாழ் இஸ்லாமியர்களின் மூலம் அரபாக இருந்திருந்தால் நீண்ட காலமாக இலங்கையில் வாழ்ந்துவரும் இஸ்லாமியர்கள் பயன்படுத்தும் மொழி அரபாகவே இருந்திருக்க வேண்டும். அல்லது தாம் சார்ந்திருந்த நிலத்துக்கேற்ப, வசதிக்கேற்ப மொழியைக் கையாள்பவர்களாக இருந்திருந்தால் சிங்கள மொழியையல்லவா சிங்களப் பகுதிகளில் வாழும் இஸ்லாமியர்கள் பேச்சு மொழியாகவோ, போதனா மொழியாகவோ கொண்டிருப்பர். சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் நீண்ட காலமாகப் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் தமிழ் மொழியை அவர்கள் பயன்படுத்த வேண்டிய அவசியமென்ன?

தமிழீழக் கோரிக்கை எழுந்ததற்கான காரணங்களும், தேவைகளும் ஏனைய தமிழர்களைவிட இஸ்லாமியத் தமிழர்களுக்குத்தான் அதிகமாக இருக்கின்றது. சிங்களப் பேரினவாத ஆட்சியாளரின் திட்டமிடப்பட்ட இனவெறித் தாக்குதல்களுக்கு அவர்கள்தான் அதிகமாக இலக்கானவர்கள்; சிங்கள சியோனிஸ்டுகளின் நிலப் பறிப்புக்கு இலக்கானவர்கள். கடந்தகால அண்மைக் காலக் குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்களை ஒப்பிட்டு நோக்கினால் இந்த உண்மை துல்லியமாகத் தெரியவரும். பிரிட்டிசாரிடமிருந்து ஆட்சியதிகாரம் சிங்களப் பேரினவாதிகளின் கைகளுக்கு மாறுவதற்கு முன்னர், கடைசியாக 1946-ம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு மாகாணத்தில் 39.0 வீதம் இஸ்லாமியத் தமிழர்கள் இருந்தார்கள். கடைசியாக 1981-ம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரங்களின்படி கிழக்கு மாகாணத்திலுள்ள இஸ்லாமியத் தமிழர்களின் பங்கு 32.2 வீதமாகக் குறைந்துவிட்டது. அதே நேரத்தில் 1946-ல் கிழக்கு மாகாணத்தில் 9.0 வீதமாக இருந்த சிங்களவர்களின் பங்கு 1981ல் 24.9 வீதமாக உயர்ந்துள்ளது. அதாவது 35 ஆண்டு காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியத் தமிழரின் பங்கு 7 வீதம் குறைந்துள்ள அதே வேளையில் சிங்கள மக்களின் பங்கு 15 வீதம் அதிகரித்துள்ளது. இவ்வாறே இஸ்லாமியத் தமிழர் கணிசமாக வாழ்ந்துவரும் வடமாகாணத்தைச் சேர்ந்த மன்னார் மாவட்டத்தில் 1946-ல் இருந்ததைவிட இஸ்லாமியத் தமிழரின் பங்கு 7 வீதம் குறைந்தும், சிங்கள மக்களின் பங்கு 5 வீதம் கூடியுமிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



புத்தளம் மாவட்டத்தில் 1921ல், 33 வீதமாக இருந்த இஸ்லாமியத் தமிழர்களின் குடித்தொகை திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தினால் 1953-ல், 29.7 வீதமாகக் குறைந்தது. ஏனைய தமிழரின் வீதமும் இவ்வாறே 22 வீதத்தில் இருந்து 15 வீதமாகக் குறைக்கப்பட்டது. 1921-ல். 42.3 வீதமாக இருந்த சிங்களவர் குடித்தொகை 1953-ல், 53 வீதமாக அதிகரித்தது. இருந்தபோதிலும் பத்து வீத அதிகரிப்பைக் கண்டு திருப்தி அடையாத சிங்கள ஆட்சியாளர்கள் புத்தளம் மாவட்டத்தை முழுமையான சிங்கள மாவட்டமாக மாற்றும் சதி முயற்சியாக, சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இருந்த சிலாபம் மாவட்டத்தை புத்தளம் மாவட்டத்தோடு இணைத்தனர். இதனால் இணைக்கப்பட்ட புத்தளம் மாவட்டத்தில். இஸ்லாமியத் தமிழரின் குடித்தொகை வீதாசாரம் 9.7 வீதமாகக் குறைந்தது. படிப்படியாகப் புத்தளம் நகரின் வியாபார கேந்திரப்பகுதிகள் இஸ்லாமியத் தமிழர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு சிங்களவர்கள் வசமானது.

புத்தளம் மாவட்ட முதல் குடிசன மதிப்பீட்டின் போது 36 வீதமாக இருந்த இஸ்லாமியத் தமிழரின் குடித்தொகை வீதாசாரம், இன்று 9.7 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 60 வீதம் தமிழ்மக்கள் (33 வீதம் இஸ்லாமியத் தமிழர்கள், 28 வீதம் ஏனைய தமிழர்கள்) வாழ்ந்து வந்த புத்தளம் மாவட்டம் சிங்களக் குடியேற்றத்தினாலும், திட்டமிட்ட மாவட்டப் புனரமைப்பினாலும் 85 வீதம் சிங்களவர் வாழும்மாவட்டமாக மாற்றப்பட்டுவிட்டது. ஆரம்பத்திலேயே புத்தளம் மாவட்டம் பறிக்கப்பட்டபோது இஸ்லாமியத் தமிழர்கள் எதிர்த்துப் போராடியிருந்தால், விழிப்புற்றிருந்தால் இன்று அம்பாறை மாவட்டத்தையாவது காப்பாற்றியிருக்கலாம்.

பிரிட்டிசார் ஆட்சியதிகாரத்தை விட்டுச் சென்றதன் பின் பல மாவட்டங்கள் நிர்வாக வசதிக்காக, நிர்வாகப் பரவலாக்கலுக்காக எனப் பிரிக்கப்பட்டன. ஆனால் புத்தளம் மாவட்டம் மட்டும் சிலாபம் மாவட்டத்தோடு இணைக்கப்பட்டு, இரண்டு மாவட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டன.

இலங்கையில் இதுவரை நடந்த மாவட்ட உருவாக்கம், எல்லை மாற்றம், ஒன்றிணைப்பு என்பன சிங்கள மயமாக்குதலுக்காகச் செய்யப்பட்டதன்றி நிர்வாக வசதிக்காகச் செய்யப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இன்று புத்தளம் தமது பிரதேசம் என்பதிலோ, மீண்டும் இழந்த உரிமைகளைப் பெறவேண்டும் என்பதிலோ இஸ்லாமியத் தமிழர்கள் யாரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. புத்தளம் மாவட்ட இழப்பின்போது இஸ்லாமியத் தமிழர்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஏற்படாத காரணத்தால் புத்தளம் மாவட்டத்துக்கு நேர்ந்த கதி, பின்னர் அம்பாறை மாவட்டத்துக்கும் ஏற்பட்டது.

35 ஆண்டுகளுக்குள் காட்டாற்று வெள்ளம்போல சிங்கள ஆட்சியாளரால் ஏற்படுத்தப்பட்ட திட்டமிடப் பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் இஸ்லாமியத் தமிழர்கள் தாங்கள் வாழ்ந்துவரும் பாரம்பரிய மண்ணி லேயே சிறுபான்மையினராக்கப்பட்டுள்ளனர். ஆட்சி யந்திரம் என்னும் நுகத்தடியைக் கையிலேந்தியதன் பின் சிங்களப் பேரினவாத ஆட்சியாளரின் ஒரே நோக்கம் இலங்கை முழுவதையும் சிங்கள பௌத்த நாடாக்கி, தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் பிரதேசங்களிலேயே அவர்களைச் சிறுபான்மையினராக்கி, அவர்களுக்கென்று நாட்டில் பாரம்பரிய பிரதேசம் என்று ஒன்றை இல்லாமலாக்குவதே. ஒரு இனத்துக் கெதிராக இனப் படுகொலையை நடத்தும் ஏகாதிபத்திய வாதிகள் முதலில் மேற்கொள்ளும் நடவடிக்கை அந்த இனத்துக்கெனச் சொந்தமான பிரதேசமென ஒன்று இருப்பதை இல்லாமற் செய்வதே. ஒரு தேசிய இனம் தலை நிமிர்ந்து நிற்க முதற் தேவை சொந்தமாக ஒரு பிரதேசம். அதை இல்லாமற் செய்துவிட்டால் சுலபமாக அந்த இனத்தையே அழித்துவிடலாம். இந்த வழியைத் தான் உலகெங்கிலுமுள்ள ஏகாதிபத்தியவாதிகள் கடைப் பிடித்து வருகிறார்கள்.

பாலஸ்தீனத்திலிருந்து பாலஸ்தீனியரை விரட்டி யடித்துவிட்டு அவர்களது நிலத்தை ஆக்கிரமிக்க, இஸ்ரேலிய யூத சியோனிஸ்டுகள் பாலஸ்தீனத்தை யூத குடியேற்றங்களினால் சுற்றி வளைத்து அங்குள்ள அரபுக் களைத் தாக்கிப் பயமுறுத்தி, அவர்களாகவே தம் நிலத்தை விட்டு ஓடவைத்தார்கள். சட்டவிரோதக் குடியேற்றங்களின் மூலம் ஏராளமான வளம்மிக்க மேற்குக்கரை நிலங்கள்முழுவதையும் அபகரித்தார்கள். யூத சியோனிசத்தைவிட சிங்களசியோனிசம் இன்னுமொருபடி மேலே சென்றது. தமிழர் பகுதிகளில் தான் மேற்கொண்ட சட்ட விரோத, பலாத்கார சிங்களக் குடியேற்றங்களை

www.padippakam.com



நியாயப்படுத்தப் பல தந்திரங்களை அது கையாண்டு வருகிறது. இஸ்லாமியத் தமிழர்களின் வழமான விவசாய நிலங்கள் உள்ள பகுதிகளை நில அபிவிருத்தித் திட்டம், புனிதநகர்த் திட்டம், உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தித் திட்டம், கரும்புப் பயிர்ச்செய்கைத் திட்டம் என்ற திட்டங்களின் பேரிலும், பாதுகாப்பு என்ற போர்வையிலும் கையகப்படுத்திய ஆட்சியாளர்கள், அந் நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவினர். நிலத்தைக் கையகப்படுத்தும் வேளைகளில் நிலத்துக்கு நட்டஈடு தருவதாகவும் மாற்று நிலம் தருவதாகவும் வாக்குறுதிகளை அள்ளிவீசும் சிங்கள ஆட்சியாளர் நிலத்தைக் கையகப்படுத்திய பின் அவர்களுக்கு எவ்வித நட்டஈடோ, மாற்று இடவசதியோ, ஏற்படுத்தித் தராமல் அவர்களைத் தவிக்கவிட்டுவிடுகின்றனர்.

ஒரு இனம் எதை இழந்தாலும் அதை மீட்டுவிடலாம். அது தன் நிலத்தை இழந்துவிட்டால் அதை மீட்பதென்பது சிரமமான செயலாகும். பாலஸ்தீனியர்கள் பாலஸ்தீனத்தை விட்டு விரட்டியடிக்கப்பட்டதன் பின் இஸ்ரேலிய யூதர்களுக்கெதிராகத் தம் தாய் மண்ணை மீட்கப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அந்த முயற்சிக்கு உலகின் பாதிக்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. இருந்தும் இழந்த மண்ணை மீட்க பாலஸ்தீனியர்கள் துன்பதுயரங்களுக்கு மத்தியில் நீண்டகாலமாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்; தொடர்ச்சியாக ஒரே இடத்திலிருந்து போராட முடியாமல் நாடோடிகளாகப் பல நாடுகளுக்கு அங்குமிங்குமாகத் தம் முகாம்களை அடிக்கடி மாற்றிக்கொண்டு அல்லலுற்று வருகிறார்கள்.

சிங்கள சியோனிச ஆட்சியின் தலைவர் ஜே ஆர்.ஜெயவர்த்தனா பகிரங்கமாகவே ''இலங்கையில் தமிழர்களுக்கெனச் சொந்தமான பகுதி என்று ஒன்று கிடையாது. தமிழர்கள் தங்கள் சொந்தப்பகுதியென்று உரிமைகொண்டாடுவதை நிறுத்த வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 3 இலட்சம் சிங்களவர்களை-அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளுடன்-குடியேற்றுவேன்'' என்று கொக்கரித்தார். இஸ்லாமியத் தமிழர்கள் தமது இருக்கும் நிலப்பகுதியையும் இழந்துவிட்டு, அதை மீட்கப் போராடுவதை விடுத்து இருக்கும் நிலத்தைக் காக்கவும், இழந்த நிலத்தை மீட்கவும் அவர்களைப்போல பாதிப்புக்குள்ளான ஏனைய தமிழர்களோடு சேர்ந்து உடனடியாகப் போராட முன்வர

B

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். இக்கட்டான நேரத்தில் தமிழினத்தைப் பிளவுபடுத்தச் சிங்களப் பேரினவாதிகள் விரித்திருக்கும் சதிவலையில் சிக்கிவிடாது இலக்கு நோக்கிய பாதையில் பயணத்தைத் தொடர வேண்டும்.

பிரிட்டிசாரிடமிருந்து சிங்களப் பேரினவாதிகள் இலங்கைத் தீவின் ஆட்சியதிகாரத்தைமட்டும் கையேற்கவில்லை; பிரிட்டிசார் விட்டுச்சென்ற பிரித்தாளும் தந்திரத்தையும் சேர்த்தே கையேற்றார்கள். ஆட்சியதிகாரத்தைக் கையேற்றதும் சிங்களப் பேரினவாதிகள் செய்த முதல் வேலை, மலையகத் தமிழ்மக்கள் 10இலட்சம்பேரின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறித்து நாடற்வர்களாக்கி அவர்களைத் தனிமைப்படுத்தியதே. அதுபோலவே தற்போது பாதிப்புக்குள்ளாகியுள்ள இஸ்லாமியத் தமிழர்களுக்கும் ஏனைய தமிழர்களுக்குமிடையில் இனரீதியாக ஐக்கியமேற்படவிடாமல், மதரீதியாகப் பிரித்துச் சண்டையை மூட்டிவிடும் முயற்சியிலுமிறங்கியுள்ளனர். இன்று அவர்களின் ஊதுகுழல்களாகச் செயற்படும் கொழும்பு வாழ் செல்வச் சீமான்கள் ஒருசிலர், இஸ்லாமியத் தமிழர்களின் தலைவர்கள் தாங்களே என்று தங்களைத் தாங்களே தலைவர்களாக்கிக்கொண்டு வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பினால் சிறுபான்மையினராகிவிடுவோம்,தமிழீழக் கோரிக்கையால் இஸ்லாமியத் தமிழருக்கு ஆபத்து. என்று கூக்குரலிடுகின்றனர். இஸ்லாமியத் தலைவர்களென்ற பெயரில் ஒரு சில செல்வச் சீமான்களின் உலகஉலாக்களுக்காகவும், உல்லாச வாழ்க்கைக்காகவும், பதவிபடாடோபங்களுக்காகவும், ஈழத்து இஸ்லாமியத் தமிழ்ப்பாட்டாளி மக்களின் உரிமைக்குரல் ஒடுக்கப்படுகிறது; போராட்ட முனை முறிக்கப்படுகிறது. இஸ்லாமியத் தமிழ்மக்கள் மத்தியிலுள்ள அறியாமையைப் பயன்படுத்தி அவர்களின் தலைவர்களாக நடித்துவரும் சுயநலக் கூட்டத்தினரை இஸ்லாமியத் தமிழர் இனங்கண்டு ஒதுக்குவதுதான், தமது உரிமையை நிலைநாட்ட அவர்கள் மேற்கொள்ள வேண்டிய முதற் கடமையாகும். இந்தப் போலி வேடதாரிகள் தமது வேடத்தை மறைக்கவும், தமக்கு ஏற்படக் கூடிய சுயலாபத்துக்கு ஆபத்தாக இஸ்லாமியத் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள உரிமையுணர்வுகளை மழுங்கடிக்கவும் மேற்கொண்டுவரும் சொத்தை வாதங்கள் இன்று இஸ்லாமியத் தமிழர்கள் மத்தியில் எடுபடவில்லை.

* தமிழீழக் கோரிக்கையால் தமிழ்ப் பகுதிகளுக்கு வெளியேவாழும் இஸ்லாமியத் தமிழர்களுக்கு ஆபத்து என்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழீழக் கோரிக்கை எழுவதற்கு முன்னரிருந்தே சிங்களப் பகுதிகளில் வாழ்ந்து வரும் இஸ்லாமியத் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பிருக்கவில்லை; நிதர்சனமான வாழ்வுக்கும், ஏன் அவர்களது உயிருக்குங்கூட உத்தரவாத மிருக்கவில்லை. சிங்களப் பகுதிகளிலிருக்கும் இஸ்லாமியத் தமிழர் வியாபாரத்தைத்தான் தமது முதன்மையான தொழிலாக மேற்கொண்டு வருகிறார்கள். சிங்களப் பகுதிகளில் அவர்களது நிம்மதியற்ற வாழ்வுக்கும், நிலையற்ற தொழிலுக்கும் புத்தளம் நகரில் (1976ல்) நடைபெற்ற நிகழ்வே சான்றாகும்.

காலங்காலமாக இஸ்லாமியத் தமிழர்கள் புத்தளம் நகரிலுள்ள பேருந்து நிலையத்தில் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வந்ததைப் பொறுக்கமாட்டாத சிங்கள ஆட்சியாளர்கள், சூழ்ச்சிசெய்து நகருக்கு வெளியே புதிதாக ஒரு பேருந்து நிலையத்தை நிறுவி, அங்கு கடைகளையும் புதிதாக அமைத்து அவற்றைச் சிங்கள மக்களுக்குக் கொடுத்துவிட்டு, திடீரென்று பழைய பேருந்து நிலையத்தை மூடி காலங்காலமாக அங்குவரும் பேருந்து நிலையப் பயணிகளையே நம்பி வியாபாரஞ்செய்துவந்த இஸ்லாமியத் தமிழர்களை நிர்க்கதியாக்கியதை அவர்கள் மறந்துவிடவில்லை.

புத்தளம் பேருந்து நிலைய மாற்றத்தினால் தாம் நிர்க்கதியாக்கப்பட்டதை எதிர்க்க முற்பட்ட இஸ்லாமியத் தமிழர்களை, புத்தளம் பெரியபள்ளி வாசலுக்குள்ளேயே புகுந்து ஈவு இரக்கமின்றிச் சுட்டுக்கொன்ற சிங்களப் போலிஸ் அதிகாரிகளான டீமெல், எட்வேட் என்ற கொலை வெறியர்களுக்கு சிங்கள ஆட்சியாளர் பாதுகாப்பும், பதவி உயர்வும் வழங்கியதையும் இஸ்லாமியத் தமிழிளைஞர்கள் மறந்து விடவில்லை.

* வடக்கு மாகாணத்தைக் கிழக்கு மாகாணத்தோடு இணைத்தால் இஸ்லாமியத் தமிழரின் தனித்துவம் மறைந்துவிடும். இஸ்லாமியத் தமிழர்கள் மேலும் சிறுபான்மையினராக்கப்பட்டுவிடுவர். எனவே கிழக்கு மாகாணம் தனித்தே இருக்கவேண்டும் என்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை என்ற புதிய மாவட்டம் இஸ்லாமியத் தமிழர்களின் குடித்தொகை வீதம் அதிகமாக இருக்கத்தக்கதாக (46.3 வீதம்) 1963-ம் ஆண்டு சிங்கள ஆட்சியாளரால் பிரிக்கப்பட்டது. 'அம்பாறை மாவட்டம் இஸ்லாமியத் தமிழர்கள் அதிக

படிப்பகம்

www.padippakam.com



மாக உள்ள மாவட்டம். எனவே எமக்கு மாவட்டப் பிரிவினையின் மூலம் நன்மை கிடைக்கும்' என்று இஸ்லாமியத் தமிழ் மக்கள் எண்ணியிருந்தனர். உண்மையில் இஸ்லாமியத் தமிழர் மீதுள்ள அனுதாபத்தாலோ, இஸ்லாமியத் தமிழ் மக்களின் தனித்துவம் பேணப்பட வேண்டுமென்றோ சிங்கள அரசு அம்பாறை மாவட்டத்தை உருவாக்கவில்லை. 'மட்டக்களப்பு மாவட்டம் தமிழர்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் மாவட்டம். அங்கு சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தினால் எதிர்ப்பு ,பலமாக இருக்கும். இஸ்லாமியத் தமிழ் மக்கள் கணிசமாக இருக்கும் அம்பாறைப் பகுதியைத் தனியாகப் பிரித்து தனி மாவட்டமாக ஆக்கினால், அங்குள்ள இஸ்லாமியத் தமிழர்களின் நிலங்களை முதலில் தனியாகக் கவரலாம். எதிர்ப்பு அதிகம் இருக்காது. ஏனைய தமிழர்களின் பகுதிகளையும் பின்னர் தனியாகக் கவனித்துக்கொள்ளலாம்' என்ற நோக்கத்தோடுதான், 1963-ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தைச் சிங்கள அரசு உருவாக்கியது. 1963-ல் இஸ்லாமியத் தமிழர்களின் பங்கு அதிகமாக (46.3 வீதம்) இருக்கத்தக்கதாகப் பிரிக்கப்பட்ட அம்பாறை மாவட்டம் இன்று சிங்கள மக்களின்பங்கு அதிக வீதத்தில் இருக்கும் மாவட்டமாக மாற்றப்பட்டுவிட்டது. 1963-ல் புதிதாக அமைக்கப்பட்டபோது 46.3 வீதமாக இருந்த இஸ்லாமியத் தமிழரின் பங்கு, கடைசியாக எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி 41.5 வீதமாகக் குறைந்துவிட்டது. முதலில் 29.3 வீதமாக இருந்த சிங்களர் பங்கு 37.7 வீதமாக அதிகரித்துள்ளது. இஸ்லாமியத் தமிழர்கள் தவிர்ந்த ஏனைய தமிழர்களின் பங்கு 23.8 வீதத்திலிருந்து 20.5 வீதமாகக் குறைந்துள்ளது. மொத்தத்தில் 18 ஆண்டுகளுக்குள் அம்பாறை மாவட்டத்திலுள்ள இஸ்லாமியத் தமிழரினதும், ஏனைய தமிழரினதும் பங்குகள் முறையே 5.2, 3.3 வீதங்களாகக் குறைந்துள்ள அதே வேளையில், சிங்கள மக்களின் பங்கு மட்டும் 8.4 வீதத்தால் உயர்ந்துவிட்டது. இந்நிலையில் 1981-ம் ஆண்டுக்குப் பின் இன்று வரை 5 ஆண்டுகளுக்குள்ளாகக் குடியேறியிருக்கும் சிங்களவர்களையும் கணக்கிட்டுப் பார்த்தால், தற்போது அம்பாறை மாவட்டம் சிங்கள மக்களை அதிகமாகக் கொண்ட மாவட்டமாக மாறிவிட்டது தெரியும். இஸ்லாமியத் தமிழர்களை அதிகமாக (46.3 வீதம்) உள்ளடக்கிய மாவட்டமாக இருந்ததால் அம்பாறை மாவட்டத்தில் இஸ்லாமியத் தமிழரின் தனித்துவம் பேணப்பட்டுள்ளதா? நிலத்தைக் காப்பாற்ற

படிப்பகம்

www.padippakam.com



முடிந்துள்ளதா? இருக்கும் நிலத்தையாவது முதலில பறிபோகாமல் காப்பாற்றிக்கொள்ள, முதலில் தமது எதிரிகள் யார் என்பதை இஸ்லாமியத் தமிழர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தின் பெயர்கூட சிங்களப் பெயராக திகாமடுல்ல என மாற்றப்பட்டுவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவராக (அரசாங்க அதிபர்), மாவட்ட அமைச்சராகச் சிங்கள இனத்தவர்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர். மாவட்டச் செயலக அலுவலர்களாகவும் ஊழியர்களாகவும்கூடப் பெரும்பாலும் சிங்களவர்களே அமர்த்தப்பட்டுள்ளனர். இந்தப் பௌத்த சிங்கள நிர்வாகத்தினால் தீகவாபி புனிதநகர்த் திட்டத்துக்கென இஸ்லாமியத் தமிழர்களுக்குச் சொந்தமான 10,000 ஏக்கருக்குமதிகமான புராதன நிலம் கையகப்படுத்தப்பட்டு பௌத்த சிங்களவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ரீதியாக அரசு வழங்கும் வீடமைப்புத் திட்டம், மாதிரிக் கிராமம், கடன் வசதி போன்றவை மாவட்டத்தில் காலங்காலமாக இருந்துவரும் இஸ்லாமியத் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டு, புதிதாக வந்து குடியேறிய சிங்களவர்களுக்கே வழங்கப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான இஸ்லாமியத் தமிழர்களின் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு அங்கு சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இன்று அம்பாறை மாவட்டமும் இஸ்லாமியத் தமிழர்களின் பிடியினின்றும் விலகிப் போய்விட்டது. 1947 தேர்தலின்போது வெறும் 2394 சிங்கள வாக்காளர்களைக் கொண்டிருந்த அம்பாறைப் பகுதி 1982ல், 78,378 சிங்கள வாக்காளர்களைப் பெற்றிருக்கிறது. நான்கு ஆண்டு (1956-1960) காலப் பகுதிக்குள் அம்பாறையில் இஸ்லாமியத் தமிழர்களது வாக்காளர் அதிகரிப்பு வீதம் நாட்டின் சராசரி அதிகரிப்பு வீதமான 10 வீதத்திலும் குறைவாக) 9 வீதமாக இருக்கையில் சிங்களவர்களின் அதிகரிப்பு வீதம் மட்டும் 500 வீதமாக இருந்தது. மூவாயிரமாக இருந்த சிங்களவர் குடித்தொகை இன்று 1,46,371 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு இஸ்லாமியர்களுக்கென்று உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்டம், கடந்த 23 ஆண்டுகளுக்குள் திகாமடுல்ல என்னும் சிங்களப் பெயர் கொண்ட, சிங்களவர்களை அதிகமாகக் கொண்ட சிங்கள மாவட்டமாக

படிப்பகம்

www.padippakam.com



ஆக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கிழக்கு மாகாணம் தனித்திருக்க வேண்டுமென்கிறார்கள். 46.3 வீதம் இஸ்லாமியத்தமிழர்களைக் கொண்டிருந்த அம்பாறை மாவட்டத்திலே தனித்துவத்தைக் காப்பாற்றமுடியாத நிலையில், 32 வீதத்தினரைக்கொண்ட கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியர்களின் தனித்துவம் காப்பாற்றப்படுமா? மாகாண வீதாசாரத்தில் அவர்களது பங்கு நிலைநிறுத்தப்படுமா?

* கிழக்கு மாகாண - வடக்கு மாகாண இணைப்பினால் அப்பிரதேசத்தில் இஸ்லாமியத் தமிழரின் வீதாசாரம் குறைந்துவிடும் என்கிறார்கள்.

முழு இலங்கையிலும் இன்று இஸ்லாமியத் தமிழர்களின் பங்கு 7.1 வீதந்தான். இஸ்லாமியத் தமிழர்கள் அனைவரும் தமிழீழத்தை ஏற்று தமிழீழத்துள் வந்துவிட்டால் இஸ்லாமியத் தமிழரின் பங்கு தமிழீழத்தில் 28 வீதமாகிவிடும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கடந்த 35 ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தைவிட கிழக்கு மாகாணந்தான் சிங்களக் குடியேற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கேதான் சிங்களர் கைகளுக்கு ஆட்சி மாறியதன்பின் இஸ்லாமியத் தமிழர்களின் பங்கு 39.0 வீதத்தில் இருந்து 32.2 வீதமாகக் குறைந்துள்ளது. வடமாகாணத்தைப் பொறுத்தவரை இன வீதாசாரத்தில் கடந்த 35 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவுமேற்படவில்லை. இருந்தபோதிலும் வடபகுதித் தமிழ் மக்கள் சிங்களக் குடியேற்றத்தால் கிழக்கு மாகாணத்தில் தமிழ் நிலம் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன ரீதியில் சிந்தித்து தம்மினத்தின் நிலம் மேலும் பறிபோவதைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்திற்காகத்தான், வடக்கு-கிழக்கு இணைந்த புராதன தமிழ்ப் பிரதேசத்தைத் தமக்குச் சொந்தமான நாடு எனப் பிரகடனப்படுத்தி, அதைக் காக்கப் புறப்பட்டுள்ளனர் இதில் இஸ்லாமியத் தமிழர்கள் ஏனைய தமிழர்கள்மீது சந்தேகப்படவேண்டிய அவசியமே இல்லை. 35 ஆண்டுகளில் தமது நிலங்களைப் பிடுங்கியவர்கள் யார் என்பதை கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்த்து உணர்ந்துகொண்டால் இஸ்லாமியத் தமிழர்களுக்கு இந்தச் சந்தேகமே எழாது. தமிழ்ப் பகுதிகளில் தமது குடித்தொகை வீதாசாரம் குறையாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானால் - சிங்களவர்களிடமிருந்து தமிழ் நிலத்தைக் காக்கப் போராடிக் கொண்டிருக்கும் ஏனைய தமிழர்களோடு சேர்ந்து போராட முன்வரவேண்டும். அதை விடுத்து, இன்னும் கொழும்புவாழ் சுயநலத் தலை

படிப்பகம்

www.padippakam.com



வர்களின் தலைமையையும் ஆலோசனைகளையுமேற்றுச் செயற்படுவார்களேயானால் அடுத்த குடிசன மதிப்பீட்டுக் கணக்கெடுப்பின்போது கிழக்கு மாகாணம் சிங்களவர்களை அதிகமாகக்கொண்ட மாகாணமாக மாற்றப்பட்டுவிடும். அங்கு இஸ்லாமியத் தமிழர்களின் குடித்தொகை வீதாசாரம் வெகுவாகக் குறைக்கப்படும் நிலைதான் ஏற்படும். இஸ்லாமியத் தமிழர்கள் தங்கள் பிரதேசத்தைக் காக்கவேண்டுமானால்-1977ம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து தமக்குச் சிங்களப் பகுதிகளில் பாதுகாப்பு இல்லை என்று அங்கிருந்து ஏராளமான தமிழர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறியதைப்போல - சிங்களப் பகுதிகளில் வாழும் இஸ்லாமியத் தமிழர்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேற வேண்டும்.

* சிங்கள ஆட்சியில் இஸ்லாமியத் தமிழர்களின் உணர்வுகள் மதிக்கப்படுகின்றன என்கிறார்கள்.

சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் இஸ்லாமியத் தமிழர்களின் உரிமைகளை மட்டுமின்றி அவர்களது உணர்வுகளேக்கூட மதிக்கவில்லை; மிதிக்கிறார்கள். இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு என்ற போர்வையில் தமிழ்ப் போராளிகளை ஒழித்துக்கட்டவென சர்வதேசப் பயங்கரவாதிகளான மொசாட் கூலிப்படையை இஸ்லாமியத் தமிழர்களின் விருப்பத்துக்குமாறாக சிங்கள அரசு வரவழைத்தது. பாலஸ்தீன விடுதலை இயக்கம், லிபியா, சவுதி அரேபியா, ஜோர்தான் போன்ற நாடுகளும் தெரிவித்த கடும் கண்டனங்களையும், ஈழத்து இஸ்லாமியத் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாகக் காட்டிய எதிர்ப்புணர்வையும் பொருட்படுத்தாது, மொசாட் பயங்கரவாதிகளை அழைத்து அவர்களைக் கொண்டு தனது ஆயுதப் படையினருககுப் பயிற்சியளித்து வருகின்றது. மொசாட் வருகையை எதிர்த்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை நடத்திய இஸ்லாமியத் தமிழர்கள் மீது வாழைச்சேனை, சாய்ந்தமருது. நிந்தாவூர், காத்தான்குடி போன்ற இடங்களில் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்து அவர்களை விரட்டியடிக்க முனைந்ததுடன், கடுமையான பத்திரிகைத் தணிக்கை முறையையும் கொண்டுவந்து மொசாட் வருகையை எதிர்த்த இஸ்லாமியத் தமிழர்களின் எதிர்ப்புணர்வுகளை வெளியே தெரியாவண்ணம் இருட்டடிப்புச் செய்தனர். இவர்கள் ஆட்சியில்தானா இஸ்லாமியத் தமிழர்களின் உணர்வுகள் மதிக்கப்படுகின்றன?

படிப்பகம்

www.padippakam.com



* ''நாட்டின் 60-க்கும் மேற்பட்ட தேர்தற் தொகுதிகளில் வெற்றியை நிர்ணயிப்பது தமது வாக்குகளே'' என்று சிங்களப் பகுதிகளில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் சிங்களப் பேரினவாதிகள் அவர்களின் பெருமையை நிலைக்க விடவில்லை. முதலில் 10 இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறித்து, அவர்கள் வகித்துவந்த பாராளுமன்றஉறுப்பினர் பதவிகளில் சிங்களவர்கள் வர வகை செய்தும், பின்னர் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழ்ப் பகுதிகளிலிருந்தும் சிங்களப் பிரதிநிதிகள் வர வகை செய்தும் ஜனநாயகப் படுகொலை நடத்திய சிங்கள ஆட்சியாளர்கள், விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்ற மாவட்ட ரீதியான தேர்தல் முறையை ஏற்படுத்தி சிங்களப் பகுதிகளில் பரந்து வாழும் இஸ்லாமியத் தமிழ் மக்கள் இதுவரை பயன்படுத்தி வந்த ஜனநாயக உரிமைக்குச் சாவுமணி அடித்துள்ளார்கள்.

இலங்கையில் ஜெயவர்த்தனா அரசினால் அமுலுக்கு வந்துள்ள மாவட்டரீதியான விகிதாசாரத் தேர்தல் முறையின்படி மாவட்டத்தில் பதிவாகும் மொத்த வாக்குகளில் 1/8 பங்கு பெறாத கட்சிகளோ, குழுக்களோ தகுதியற்றதாகக் கணிக்கப்பட்டு தேர்தல் போட்டியின்றும் விலக்கிக்கொள்ளப்படும். அதாவது பதிவாகும் மொத்த வாக்குகளில் 12.5 வீதம் பெறாத கட்சிகள் போட்டியின்றும் வில்க்கிக்கொள்ளப்படும். மாவட்டரீதியில் தமிழீழப் பகுதிகளிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்கள் தவிர்ந்த வேறு எந்த மாவட்டத்திலும் இஸ்லாமியத் தமிழர்களின் குடித்தொகை பத்து வீதந்தானுமில்லை. சிங்களப் பகுதிகளிலுள்ள எந்த மாவட்டத்திலும் இனிமேல் இஸ்லாமியத் தமிழர்கள் தனித்து நின்று வெற்றிபெற முடியாது. சிங்களக் கட்சிகளோடு சேர்ந்து போட்டியிட்டாலுங் கூட அக்கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்களில் இடையிலோ அன்றிக் கடைசியிலோதான் சேர்க்கப்படுவார்கள். விகிதாசாரத் தேர்தல் முறையினால் கணிசமான வாக்குகளைப் பெறும் கட்சிகளின் வேட்பாளர்கள்தான் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எனவே எந்த சிங்களப் பகுதியிலும் இஸ்லாமியத் தமிழர்கள் இனி வெற்றிபெற முடியாது; பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியாது.

படிப்பகம்

www.padippakam.com



பழைய தேர்தல் முறையில் ஏராளமான தேர்தல் தொகுதிகளில் வெற்றியை நிர்ணயிக்கும் சக்தியைப் பெற்றிருந்த இஸ்லாமியத் தமிழர்களின் வாக்குகள் மாவட்டரீதியான விகிதாசாரத் தேர்தலில் சக்தியற்ற தாகிவிட்டன. சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிடப் பட்ட இந்த நடவடிக்கையினால் இஸ்லாமியத் தமிழர் களும் மலையகத் தமிழர்களைப்போல யாரும் கேட் பாரற்ற அரசியல் அனாதைகளாக்கப்பட்டுவிட்டனர். அரசியல்வாதிகளைப் பதவிக்குக்கொண்டுவரும் சக்தியற்ற வர்களாக வாக்குரிமையற்றவர்களாக இருப்பதால் மலை யகத் தமிழர்கள் அரசியல்வாதிகளால் கவனிக்கப்படாத அனாதைகளாக, கல்வி பொருளாதாரம் சுகாதாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் புறக்கணிக்கப்பட்ட வர்களாக இருக்கின்றனர். அதேபோல வாக்குரிமை இருந் தும் அந்த வாக்குக்களுக்கு இருந்த மதிப்பு குறைக்கப் பட்ட நிலையில் எதிர்காலத்தில் மலையகத் தமிழர்களைப் போலப்பல சிரமங்களை எதிர் நோக்கவேண்டிய அபாயக ரமான சூழ்நிலைக்கு இஸ்லாமியத் தமிழர்கள் தள்ளப் பட்டுள்ளனர்.

* வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சிங்கள வர்கள் மத்தியில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள் பாதுகாப்பாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஏன் தமிழீழம் என்று கேட்கிறார்கள்.

இஸ்லாமியத் தமிழர்கள் சிங்களப் பகுதிகளில் பாது காப்பாகத்தான் வாழ்கிறார்களா என்பதைக் கடந்தகால வரலாற்று ஏட்டைப் புரட்டிப் பார்த்தால் நன்கு புரியும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே சிங்களப் பகுதிகளில் வாழ்ந்துவரும் இஸ்லாமியத் தமிழர்கள் பெரும் பான்மையினத்தவர்களான சிங்களவர்களால் தாக்கப்பட்டுத்துன்புறுத்தப்படும்நிலை இருந்துவருகிறது. 1915-ம் ஆண்டு இஸ்லாமியத் தமிழர்கள் தாக்கப்பட்டது, (சிங்களவர்களால்), சிங்களப் பகுதிகளில்தான்.

1976ம் ஆண்டு பெப்ரவரி இரண்டாம்நாள் - தமிழ ரைச் சுட்டுக்கொன்றால் அரசு பதவி உயர்வு அளித்திடும் என்ற உற்சாகமேலீட்டால் -. புத்தளம் பெரிய பள்ளிவா சலில் சிங்களப் போலிசார் காட்டுமிராண்டித்தனமாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஏழு இஸ்லாமியத் தமிழர் தம் குருதியால் மசூதியைக் குளிப்பாட்டிவிட்டு உயிரை விட்டது, தற்போது சிங்களவர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில்தான்.

C

படிப்பகம்

www.padippakam.com



புத்தளம் பள்ளிவாசல் படுகொலையை அடுத்து புத்த பிக்கு ஒருவனின் தலைமையின் கீழ் காவற்படையினரும், சிங்களக் காடையர்களும் இணைந்து மேற்கொண்ட கூட்டுத்தாக்குதலில் இஸ்லாமியத் தமிழர்களின் 271 வீடுகள் கொளுத்தப்பட்டு, 44 கடைகள் சூறையாடப் பட்டு, இருவர் கொல்லப்பட்டது (சிங்களவர்களால்) சிங்களவர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில்தான்.

1980ம் ஆண்டு ஜனவரிமாதம் 21ம் திகதி கொழும்பு கொம்பனித்தெரு பள்ளி வாசலில் தொழுகை நடத்திய மொகமட் குசேன், ஜபார் சிங்களப்போலீசாரால் குண் டடிப்பட்டு இறந்தது சிங்களப் பகுதியில்தான்.

1982-ம் ஆண்டு காலி நகரிலும் அதனைச் சுற்றியுள்ள 15 கிராமங்களிலும் சிங்களக் குண்டர்களால் பெரும் தாக்குதல்களுக்கு உள்ளாகி இஸ்லாமியத் தமிழர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டதும், உயிர் பறிக்கப் பட்டதும் (சிங்களவர்களால்) சிங்களப் பகுதிகளில்தான்.

இப்படியாகச் சிங்களவர்கள் அதிகமாக வாழும் இன்னும் ஏராளமான இடங்களில் இஸ்லாமியத் தமிழர்கள் மீது சிங்களக் குண்டர்களால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில் **சிங்களப்பகுதி களில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள் பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்பது ஓநாய்க் கூட்டத்தின் மத்தியில் வெள்ளாடுகள் பாதுகாப்பாக இருக்கின்றன என்று சொல்வதைப் போலத்தான். உண்மையில் இஸ்லாமியத் தமிழர்களுக்கு இருக்கும் ஒரே பாதுகாப்பு தமிழீழம்தான்.**

* சிங்களப் பகுதிகளில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள் தான் பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களாக இருக் கிறார்கள் என்கிறார்கள்.

உண்மையில் சிங்களப் பகுதிகளில் இருக்கும் இஸ்லாமியத் தமிழர்களின் பொருளாதாரம் சிங்கள ஆட்சியாளரின் திட்டமிடப்பட்ட சதித்திட்டங்களினால் அதளபாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக இஸ்லாமியத் தமிழர்களின் கைகளில் இருந்துவந்த இரத்தினக்கல் வியாபாரத்தை, சிங்களர் கைகளுக்கு மாற்றிவிட சிங்கள ஆட்சியாளர் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டுவிட்டனர். ஏற்கெனவே இஸ்லாமியத் தமிழர் கைகளில் இருந்துவந்த இரத்தினக்கல் சுரங்கப்

படிப்பகம்

www.padippakam.com



பகுதிகள் கைவிடப்பட்டு, புதிய இடங்களில் இரத்தினக்கல் சுரங்கங்களை ஏற்படுத்தியதன் மூலமும், இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் சிங்களவர்களை உள்ளடக்கிய ஒரு கூட்டுத்தாபனத்தை அமைத்ததன் மூலமும் இரத்தினக்கல் உற்பத்தியும், சந்தைப்படுத்தலும் படிப்படியாகச் சிங்களர் கைகளில் சென்றடைந்து விட்டது.

புத்தளம் நகரின் பேருந்து நிலையத்தில் இஸ்லாமியத் தமிழர் கைகளில் இருந்துவந்த வர்த்தகத்தைச் சிதறடித்து, புதிதாக ஒரு பேருந்து நிலையத்தையே அமைத்து, சிங்களர் கைகளில் புத்தளம் நகரின் வர்த்தகத்தைத் திட்டமிட்டுப் பறித்துக் கொடுத்தது சிங்களப் பேரின வாத ஆட்சி.

இன்னும் பல சிங்களப் பகுதிகளில் இஸ்லாமியத் தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் காலத்துக்குக் காலம் சிங்களக் குண்டர்களினால் தாக்கிச் சூறையாடப்பட்டும், தீ வைக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் வருகின்றன.

இவ்வாறு முன்னொரு காலத்தில் இலங்கை முழுவதிலும் இஸ்லாமியத் தமிழர்கள் வியாபாரத்தில் முன்னோடிகளாக இருந்த நிலை மாறி, இன்று அது சிங்களவர் கைகளுக்குச் சென்றுகொண்டிருக்கிறது. முன்னர் சிங்களப் பகுதிகளில் மேம்பட்டிருந்த இஸ்லாமியத் தமிழர்களது பொருளாதார நிலை இன்று வீழ்ச்சியுற்றிருக்கிறது; வீழ்ச்சியடைந்து வருகிறது. இது தான் உண்மை.

* சிங்களர் ஆட்சியில் இஸ்லாமியத் தமிழர்களுக்கும் அமைச்சர் பதவிகள் தந்திருக்கிறார்கள். ஆளும் அரசில் பங்கு வகிக்கும் நாம் ஏன் தமிழர்களோடு சேர்ந்து தமிழீழம் கோரி இன்னலுற வேண்டும்? என்று கேட்கிறார்கள்.

சிங்களர் ஆட்சியில் இஸ்லாமியர்கள் அமைச்சர்களாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இஸ்லாமியர்களின் நலன்களைக் கவனிக்கும்திறன் அவர்களுக்கு இருக்கின்றதா? 1976-ம் ஆண்டு புத்தளத்திலும், 1982ம் ஆண்டு காலியிலும் இஸ்லாமியத் தமிழர்கள் சிங்கள இனவெறியர்களின் தாக்குதல்களில் செத்து மடிந்தபோது இந்த இஸ்லாமிய அமைச்சர்களால் தம் மக்களுக்குப் பாதுகாப்புத் தரமுடிந்ததா? ஏன், அந்த

படிப்பகம்

www.padippakam.com



வெறிச் செயல்களைக் கண்டித்து ஒரு வார்த்தையாவது பேச முடிந்ததா? இஸ்லாமியத் தமிழர்களின் விருப்புக்கு மாறாகச்சர்வதேசப் பயங்கரவாதிகளான மொசாட் கூலிப்படையைச் சிங்கள அரசு வரவழைத்ததை எதிர்த்து மூச்சுவிடக்கூட முடிந்ததா இவர்களால்? மொசாட் வருகையை எதிர்த்து அமைதிவழியில் ஆர்ப்பாட்டங்களை நடத்திய இஸ்லாமியத் தமிழர்கள்மீது சிங்கள ஆயுதப் படையினர் பல இடங்களில் நடத்திய துப்பாக்கிக் குண்டுகளைப் பெயருக்காவது இவர்கள் கண்டித்த துண்டா?

எண்ணைவள நாடுகளான அரபு நாடுகளின் உறவுக்காக இஸ்லாமியத் தமிழர்களிலிருந்து ஒருசில சுயநலமிகளுக்கு அமைச்சர் பதவிகளைக் கொடுத்து, அவர்களைக் காட்சிப் பொருளாக வைத்திருப்பதன்மூலம் முழு இஸ்லாமிய மக்களுக்கும் வேண்டிய உரிமைகளைத் தாங்கள் வழங்கிவிட்டதாகப் பாசாங்கு செய்துவருகின்றனர், சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள். அமைச்சர் பதவிகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்தக் கயவர்களோ தம் இனத்துக்கெதிராக ஆட்சியாளரும் ஆயுதப் படையினரும் இழைக்கும் அநீதிகளைக்கண்டு ஆட்சேபனையோ, கண்டனமோகூடத் தெரிவிக்காமல் பேசாமடந்தைகளாகித் தாம் வெறும் தலையாட்டிப் பொம்மைகள்தான் என்பதை உறுதி செய்கிறார்கள். அண்மைக்காலத்தில் அமைச்சர் பாக்கீர் மாக்காருக்கு நேர்ந்த சம்பவம் இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஊழல் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட சிங்களவரான ஈ. எல். சேனநாயக்காவுக்கு பதவி கொடுப்பதற்காக பேருவளை எம். பி. ஜனாப் பாக்கீர் மாக்காரிடம் இருந்த சபாநாயகர் பதவியைப் பிடுங்கி ஈ. எல். சேனநாயக்காவிடம் கொடுத்த ஜெயவர்த்தனா அரசு, பாக்கீர் மாக்காருக்கு ஒப்புக்காகத் திணைக்களங்கள் ஏதுமற்ற மந்திரி பதவியைக் கொடுத்தது. சபாநாயகராக இருந்த ஜனாப் பாக்கீர் மாக்கார் தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக "முஸ்லீம்கள் சிங்களவர்களின் வழித்தோன்றல்கள்" என்று இனத்தையே அடகுவைக்கும் வகையில் கூட பொதுமேடைகளில் பேசித் தன் ராஜ விசுவாசத்தைக் காட்டியபோதிலும் ஆட்சியாளர்கள் அந்த ராஜவிசுவாசியின் சபாநாயகர் பதவியைப் பிடுங்கிச் சிங்கள ஊழல் மந்திரிக்குக் கொடுத்தனர். கடந்த

படிப்பகம்

www.padippakam.com



3 ஆண்டுகளாக திணைக்களங்களற்ற (இலாகாக்களற்ற) அமைச்சராக இருந்துவரும் பாக்கீன் மாக்கார் 3 ஆண்டுகளாகப் பதவியிலிருந்தும் தனக்குத் திணைக்களங்கள் ஒதுக்கப்படவில்லை என்றும் மந்திரிசபைக் கூட்டம் நடைபெறும் கூடத்தைக்கூடத் தான் பார்க்கவில்லை. அது எப்படி இருக்கிறது என்று கூடத் தெரியாது என்று பாராளுமன்றத்தில் புலம்பியிருக்கிறார். இவர் போன்று இஸ்லாமிய அமைச்சர் பெருமக்கள் சிங்கள அரசு கட்டிலின் ஓரத்தில் குந்திக்கொண்டிருந்த காலங்களிற் தான் இஸ்லாமியத் தமிழர் பகுதிகளில் அதிகளவு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இஸ்லாமியர் மதம் நாட்டின் இரண்டாந்தர மதமாக்கப்பட்டது. சிங்கள ஆட்சியாளரால் இஸ்லாமியர் ஒரு சிலருக்கு வழங்கப்படும் அமைச்சர் பதவியினால் பதவியைப் பெறும் ஒரு சிலர்தான் பயனடைகிறார்களே தவிர, இஸ்லாமியத் தமிழ்மக்களுக்கு அதனால் எதுவித பயனும் கிடையாது.

* கிழக்கு மாகாணம் இஸ்லாமியத் தமிழர்கள் கணிசமாக வாழும்பகுதி. ஆளும் சிங்கள மக்களோடு சேர்ந்து எம்மை வளப்படுத்திக்கொள்ளவேண்டுமே தவிர சிறுபான்மையினரான தமிழர்களோடு சேர்ந்து தனிநாடு போராட்டத்தில் ஈடுபட்டு ஆபத்தைத் தேடிக்கொள்ளக்கூடாது என்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியத் தமிழர்கள் கணிசமாக வாழ்கிறார்கள் என்பது உண்மை. அவர்கள் எப்படி வாழ்கிறார்கள்? பொருளாதார ரீதியில் சிறப்புற வாழ்கிறார்களா? அவர்களது தொழில், நிலம் என்பவற்றுக்குப் பாதுகாப்புண்டா? அவர்கள் உரிமைகள் காப்பாற்றப்படுகின்றனவா? என்ற கேள்விகளுக்கு விடை தேடினால் அவர்கள் பெரும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது புலப்படும்.

* சிங்கள ஆட்சியில் கடந்த 35 ஆண்டுகளில் கிழக்கு மாகாணக் குடித்தொகையில் அவர்களது பங்கு 39.0 வீதத்திலிருந்து 32.8 வீதமாகக் குறைந்துள்ளது. குறைந்த வீதத்தை ஆக்கிரமித்துள்ளவர்கள் சிங்களவர்கள்.

* கிழக்கு மாகாணத்தில் பாரம்பரியமாக விவசாயம் செய்துவந்த இஸ்லாமியத் தமிழர்களது விளை

படிப்பகம்

www.padippakam.com



நிலங்கள் புனிதநகர்த் திட்டம், நில அபிவிருத்தித் திட்டம், பாதுகாப்பு என்ற போர்வையில் சிங்கள அரசினால் அபகரிக்கப்பட்டுள்ளன. அபகரிக்கப்பட்ட நிலங்களை அனுபவிப்பவர்கள் சிங்களவர்கள்.

* காலங்காலமாகக் கிழக்கு மாகாணக் கரையோரங்களில் இஸ்லாமியத் தமிழர்கள் மீன்பிடித்து வந்த பகுதிகளில் சில ஆண்டுகளுக்குமுன் முதலில் பருவ காலத்தில் வந்து மீன்பிடித்துச் சென்ற சிங்கள மீனவர்கள் தற்போது நிரந்தரமாகத் தங்கி இஸ்லாமியத் தமிழர்களின் தொழிலையே ஆக்கிரமித்துள்ளனர்.

* கண்ணுக்கெதிரே இஸ்லாமியத் தமிழர்கள் தாங்கள் கணிசமாக வாழ்ந்துவந்த புத்தளம், அம்பாறை ஆகிய இரு மாவட்டங்களைச் சிங்களக் குடியேற்றங்களினால் இழந்துள்ளனர்.

* இஸ்லாமியத் தமிழரின் மதம் நாட்டில் இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டு, நாட்டின் முதன்மையான பேணிப் பாதுகாக்கப்படவேண்டிய மதமாக பௌத்த மதம் ஆக்கப்பட்டுள்ளது.

* இஸ்லாமியத் தமிழர்களின் வழிபாட்டுத் தலமான பள்ளிவாசல்களுக்குள் புகுந்து தொழுகை நடத்துபவர்களைச் சிங்கள ஆயுதப்படையினர் சுட்டுக் கொல்கின்றனர்.

* புனிதநகர் என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்தில் (தீகவாபியில்) இஸ்லாமியத் தமிழர் காலங்காலமாக வாழ்ந்துவந்த மரபுவழி நிலங்கள் சிங்கள ஆட்சியினரால் பறிக்கப்பட்டு பௌத்த சிங்களவர்களிடம் கையளிக்கப்படுகிறது.

* பாரிய பொருளாதாரத் திட்டங்களில் இஸ்லாமியத் தமிழர் பகுதிகள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றன.

* அரசினால் வழங்கப்படும் வேலைவாய்ப்பு, பதவி உயர்வு, தொழிற்கடன், நிவாரணம் என்பவற்றிலும் இஸ்லாமியத் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



* ஜெயவர்த்தனா அரசு கொண்டுவந்துள்ள விகிதா சாரத் தேர்தல் முறையினால் இஸ்லாமியத் தமிழர் களின் ஜனநாயக உரிமைக்குச் சாவுமணி அடிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில் தொடர்ந்தும் சிங்களவர்களோடு சேர்ந்து வாழ்வதன் மூலம் இஸ்லாமியத் தமிழர்கள் தங்களை வளப்படுத்திக்கொள்ள முடியுமா? பாதுகாத்துக்கொள்ள முடியுமா? அவ்வாறு சேர்ந்துவாழ முயற்சிப்பது ஓநாய்க் கூட்டத்தின் மத்தியில் ஆட்டுமந்தை சேர்ந்து வாழ நினைப்பதுபோல, பாம்பின் நிழலில் தவளை இளைப்பாற நினைப்பது போலத்தான் இருக்கும். தங்களை வளப் படுத்திக்கொள்வதற்காக ஒருசில சுயநலக் கும்பல்கள் காட்டும் இன அழிவுப் பாதையை, அரசியல் விழிப் புணர்வு பெற்றுவிட்ட இன்றைய இஸ்லாமியத் தமிழி ளைஞர் சமுதாயம் புறக்கணித்து வருகிறது. தமது தாழ்ந்த நிலைக்குக் காரணமானவர்கள் யார் என்பதைத் தெள்ளத்தெளிவாகப் புரிந்துகொண்ட இஸ்லாமியத் தமிழிளைஞர்கள் இன்று தம்மைப்போல பாதிக்கப்பட்ட ஏனைய தமிழிளைஞர்களோடு சேர்ந்து இனரீதியில் ஐக்கியப்பட்டு தமது இழந்த உரிமைகளை மீட்கப் போராட முன்வந்துள்ளனர். இலங்கையில் வாழும் இஸ்லாமியத் தமிழ் மக்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பும், மதத்துக்குரிய மதிப்பும் சுதந்திரத் தமிழீழத்தில் மட்டுந்தான் கிடைக்கும்.

## இனரீதியான குடித்தொகை

### கிழக்கு மாகாணம்

| இனங்கள் | நூறு ஆண்டுகளுக்கு முன் | பிரிட்டிசார் ஆட்சியைச் சிங்களவரிடம் ஒப்புடைப்பதற்கு முதல் ஆண்டு | கடைசியாக 'குடிசன மதிப்பீடு எடுக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| | *1881* | *1946* | *1981* |
| இஸ்லாமியத் தமிழர்கள் | *43001* | *109024* | *315201* |
| | *34.5%* | *39.0%* | *32.2%* |
| ஏனைய தமிழர்கள் | *75408* | *136059* | *411451* |
| | *59.1%* | *48.0%* | *42.4%* |
| சிங்களவர்கள் | *5947* | *27556* | *243358* |
| | *4.6%* | *9.8%* | *24.9%* |

படிப்பகம்

www.padippakam.com



வடக்கு மாகாணம்

| | | | |
|---|---|---|---|
| இஸ்லாமியத் தமிழர்கள் | 10416 | 18183 | 52638 |
| | 3.5% | 3.7% | 4.7% |
| ஏனைய தமிழர்கள் | 289481 | 449958 | 1023229 |
| | 95.6% | 93.8% | 92.0% |
| சிங்களவர்கள் | 1379 | 9602 | 33149 |
| | 0.4% | 2.0% | 2.9% |

அம்பாறை மாவட்டம்*

| | 1963 | 1981 |
|---|---|---|
| இஸ்லாமியத் தமிழர்கள் | 98270 | 161481 |
| | 46.3% | 41.5% |
| ஏனைய தமிழர்கள் | 50480 | 79725 |
| | 23.8% | 20.5% |
| சிங்களவர்கள் | 62160 | 146371 |
| | 29.3% | 37.7% |

* 1963-ம் ஆண்டுதான் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம்.

S. Ravi
Postfach 1511
7312 Kirchheim/Teck


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

மாவட்டரீதியாக இஸ்லாமியத் தமிழர்களின் குடித்தொகை எண்ணிக்கையும், விதமு




படிப்பகம்